48—

வீட்டு வசதி வாரிய குடியிருப்புகள்

***7898—திரு. கே. தங்கவேல்:**

மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தாராபுரம், கொட்டாப்புளியம் பாளையத்தில் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின்மூலம் குடியிருப்புகள் கட்ட அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

தாராபுரம், கொட்டாப்புளியம் பாளையத்தில் வீட்டு வசதி வாரியத்தின்மூலம் வீடுகள் கட்ட அரசுமூலம் இதுவரை நிலம் ஏதும் தேர்வு செய்யப்படவில்லை என்பதால் வீடு கட்டும் திட்டம் எதுவும் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. தங்கவேல் அவர்கள்.*

திரு. கே. தங்கவேல்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே 334 குடியிருப்புகள் தாராபுரம், கொட்டாப்புளியம் பாளையத்தில் இருக்கின்றன. அவை வழக்கில் இருக்கின்றன. அந்த வழக்கில் 2008 ஆம் ஆண்டு கோர்ட் தீர்ப்பளித்தும் இன்னும் அந்த வேலைகள் முடியாமல் இருக்கின்றன. அதில் தலையிட்டு, அந்த 334 குடியிருப்புகளுக்கு விற்பனைப் பத்திரம் வழங்குவதற்கான நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாராபுரத்தில் சிறிய மற்றும் நடுத்தர வீடுகள் கட்டும் திட்டத்தின்கீழ் 334 வீடுகள் பகுதி 1, 2, 3 திட்டப்*

2013 மார்ச் 25]

பகுதியில் கட்டுவதற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. பணம் கட்டியவர்கள் அனைவருக்கும் விற்பனைப் பத்திரம் வழங்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. தங்கவேல் அவர்கள்.

திரு. கே. தங்கவேல்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பணம் கட்டியவர்களுக்கு விற்பனைப் பத்திரம் வரவில்லை என்று தகவல் இருக்கிறது. அங்கு ஒரு சென்ட் நிலம் 40 ரூபாய்க்கு வாங்கியிருக்கிறார்கள். 2008 முதல் வட்டியுடன் கட்டச் சொல்லி, கோர்ட் தீர்ப்பு அளித்திருக்கிறது. ஆனால், இதுவரையில் விற்பனைப் பத்திரம் வழங்கப்படவில்லை என்பதுதான் தகவலாக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பணம் கட்டியும் யாருக்கு வழங்கப்படவில்லை என்பதை பெயர் மற்றும் விவரத்துடன் கூறினால், உடனடியாகப் பத்திரம் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ர.ம. பாபு முருகவேல் அவர்கள்.

திரு. ர.ம. பாபு முருகவேல்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆரணி தொகுதியிலே நிலங்களின் விலை அதிகமாக இருக்கின்ற காரணத்தால், பெரிய முதலீடு செய்து வீடுகள் கட்டிக்கொள்ள இயலவில்லை. இதனைக் கருத்திலேகொண்டு, அங்கே வீட்டு வசதித் துறையின்மூலமாக வீடுகளைக் கட்டித்தர அரசு முன்வருமா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வீட்டு வசதி வாரியத்தின்மூலமாக அந்தப் பகுதியில் வாழ்கின்ற மக்களுக்குத் தேவையிருப்பின், நிலங்கள்

கண்டறியப்பட்டு, கையகப்படுத்தப்பட்டு, அந்தத் திட்டத்திற்கு வரவேற்பு இருந்தால், நிச்சயமாக ஆரணி பகுதியில் நிறைவேற்றப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10–15

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 49, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் சி. விஜயபாஸ்கர், மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.*

49—

அங்கன்வாடி மையம்

***15888—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:**

மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விராலிமலை தொகுதி, கத்தலூர் கிராமத்திலுள்ள அங்கன்வாடி மையத்தினைச் சீரமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) விராலிமலை தொகுதி, விராலிமலை ஒன்றியம், கத்தலூர் ஊராட்சி, கத்தலூர் கிராமத்திலுள்ள அங்கன்வாடி மையம் 1999 ஆம் ஆண்டு முதல் அரசு கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது. இம்மையக் கட்டடத்தில் மேல்கூரை, தரை தளம் மற்றும் சுவர் பழுதடைந்து விட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களால் அங்கன்வாடி மையக் கட்டடங்களில் உள்ள பெரிய பழுதுகளை நீக்க ரூ.39 கோடியே 14 இலட்சமும், சிறிய பழுதுகளை நீக்க ரூ.52 கோடியே 84 இலட்சமும் ஒதுக்கீடு செய்து, ஆணைகள் பிறப்பிக்கப்பட்டு, பணிகள் விரைந்து மேற்கொள்ளப்பட்டதன் அடிப்படையில், விராலிமலை தொகுதி, விராலிமலை ஒன்றியம், கத்தலூர் ஊராட்சி, கத்தலூர் கிராமத்திலுள்ள இரண்டு அங்கன்வாடி மையங்கள் ரூ.90,000/- செலவில் சீர்செய்யப்பட்டு ஜனவரி 2013 ஆம் ஆண்டு